# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2018.08.20 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## இலங்கை மின்சாரம் (திருத்தம்)

**2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *சட்டப்பயன்பற்றிய கூற்று*

***வாசகம் 2*** : இவ்வாசகம், 2009 ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 28ஆம் பிரிவை அதற்கான (3) ஆம் உட்பிரிவை நீக்கம் செய்வதன்மூலம் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்ட வாறான அப்பிரிவின் சட்டபயனானது மின்சார வழங்கலைத் தேவைப்படுத்துகின்ற ஆள் ஒருவரினால் கொடுக்கப்பட்ட பிணைப்பொறுப்பொன்றின் மீது வட்டிசெலுத்துவதற்கான கடத்துகை உரிமம் பெறுநரின் பொறுப்பை நீக்குவதற்கானதாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவை, அப்பிரிவின் (4) ஆம், (6) ஆம் மற்றும் (8) ஆம் உட்பிரிவுகளில் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது-

(அ) (4)ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பின் ஏற்புடைமையை, அதற்கான மரபுசாரா புதுப்பிக்கத்தக்க வலு மூலவள வரைபடங்கள் கிடைக்கக்கூடியதாகவிராதுள்ள மரபுசாரா புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களினூடாக மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்கின்ற புதிய பிறப்பாக்கத் தொகுதிகளுக்கு நீடிப்பதும், அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட தரப்படுத்தப்பட்ட இறுப்பனவைத் தொழிற்படுத்துவதற்கானதாகும்;

(ஆ) (6) ஆம் உட்பிரிவிற்கு, அப்பிரிவை மாற்றீடுசெய்வதன்மூலம் விளைவாந்தன்மையதான திருத்தத்தைச் செய்வதற்கானதாகும்; அத்துடன்

(இ) "தரப்படுத்தப்பட்ட மின்வலு கொள்வனவு உடன்படிக்கை" எனும் சொல்லமைப்பு வரைவிலக்கணத்தை புதிய வரைவிலக்கணத்துடன் மற்றும் மாற்றீடு செய்வதற்கும் மற்றும் "தரப்படுத்தப்பட்ட இறுப்பனவு" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உள்ளடக்குவதற்குமாகும்.

## இலங்கை மின்சாரம்
## (திருத்தம்)

*ச.வ. - ஓ. 19/2014*

### 2009 ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை மின்சார (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்கச் சட்டத்தின் 28ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் ) 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 28 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 43ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) நான்காம் உட்பிரிவில் -

(அ) அதன் (அ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தில், ''விசாலிப்பிற்கு;'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''விசாலிப்பிற்கு; அல்லது'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டுஅதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

''(ஆ) 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை நிலை

பெறுதகு வலு அதிகாரசபையினால் அச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் மரபுசாரா புதுப்பிக்கத்தக்க வலு மூலவள வரைபடங்கள் கிடைக்காமை காரணமாக அதற்கான திறந்த விலை மனுகோரும் முறைவழி எதுவும் இயலாததாகவுள்ள மரபுசாரா புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களினூடாக மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்வதற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் மீதானதும், அத்துடன் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட தரப்படுத்தப்பட்ட இறுப்பனவில் தொழிற்படுத்தப்படவேண்டியதும், தரப்படுத்தப்பட்ட மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கையொன்றினால் நெறிப்படுத்தப்படுவதுமான புதிய பிறப்பாக்கத் தொகுதிக்கு அல்லது விசாலிப்பிற்கு; அல்லது";

(2) அதன் (6) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(6) நான்காம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் ஒருகேள்விப் பத்திரத்தைச் சமர்ப்பிக்காதிருப்பதற்கு எவரேனுமாளுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்பு எவ்வாறிருப்பினும்,

(அ) கடத்துகை உரிமம் பெறுநர், அத்தகைய ஆள், கடத்துகை உரிமம் பெறுநரின் தொழினுட்ப மற்றும் பொருளாதாரத் தனித்துவ வரையறைகளுக்கு இணங்கியொழுக, புதிய பிறப்பாக்கப் பொறித்தொகுதியை அல்லது ஏலவேயுள்ள பிறப்பாக்கப் பொறித்தொகுதியொன்றின் பிறப்பாக்க கொள்ளளவின் விசாலிப்பை அபிவிருத்தி செய்வதற்கு இயன்றவராகவுள்ளாரென்றும், தரப்படுத்தப்பட்ட மின்வலுக்

கொள்வனவு உடன்படிக்கையொன்றின் நியதிநிபந்தனைகளுக்கு இணங்கியொழுக, அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட தரப்படுத்தப்பட்ட இறுப்பனவில், மரபுசாரா புதுப்பிக்கத்தக்க வலு மூலமொன்றை பயன் படுத்திப் பிறப்பிக்கப்பட்ட மின்வலுவை அல்லது மின்சாரப் பிறப்பாக்கக் கொள்ள ளவை விற்பனை செய்வதற்கு இயன்றவராக வுள்ளாரென்றும் தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் அல்லது நான்காம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தின் (அ) என்னும் பந்தியின் கீழ் அல்லது (இ) என்னும் பந்தியின் கீழ் ஒருகேள்விப்பத்திரத்தைச் சமர்ப்பிக்காதிருப்பதற்கு எவரேனுமாளுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்பு எவ்வாறிருப் பினும் ;

(ஆ) கடத்துகை உரிமம் பெறுநர், சம்பந்தப்பட்ட வருடன் பேச்சுவார்த்தை நடாத்தி, அத்தகைய ஆள், கடத்துகை உரிமம் பெறுநரின் தொழினுட்ப மற்றும் பொருளாதாரத் தனித்துவ வரையறைகளுக்கு இணங்கி யொழுக, புதிய பிறப்பாக்கப் பொறித் தொகுதியை அல்லது ஏலவேயுள்ள பிறப்பாக் கத் தொகுதியொன்றின் பிறப்பாக்கக் கொள்ளளவின் விசாலிப்பை அபிவிருத்தி செய்வதற்கு இயன்றவராகவுள்ளாரென்றும், ஆகக்குறைந்த ஆகுசெலவில் மின்வலுவை அல்லது மின்சாரப் பிறப்பாக்கக் கொள்ள ளவை விற்பனை செய்வதற்கு இயன்றவராக வுள்ளாரென்றும் தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், அத்த கைய கொள்வனவின் நியதிகளையும் நிபந் தனைகளையும் விவரிக்கின்ற வரைவு மின் வலு கொள்வனவு உடன்படிக்கையுடன்

சேர்த்து, ஆணைக்குழுவின் விதப்புரைகளைப் பெற்றுக்கொண்ட பின்னர் அதன் விதப்புரைகளை அங்கீகாரத்துக்காக அமைச்சரவைக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்.";

(3) அதன் (8) ஆம் உட்பிரிவில் -

(அ) "தரப்படுத்தப்பட்ட மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

" "தரப்படுத்தப்பட்ட மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கை" என்பது, 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் மரபுசாரா புதுப்பிக்கத்தக்க வலு மூலவளவரைபடங்கள் கிடைக்காமை காரணமாக அதற்கான திறந்த விலைமனுகோரும் முறைவழி எதுவும் இயலாததாகவுள்ள மரபுசாரா புதுப்பிக்கத்தக்க வலு மூலவளங்களைப் பயன்படுத்தி, கொள்ளளவு 10 மெகாவாற்று அல்லது அதற்குக் குறைவான மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்கின்ற ஒரு மின்வலுப் பொறித் தொகுதியிலிருந்து மின்சார வலுவைக் கொள்வனவு செய்வதற்காகக் கடத்துகை உரிமம் பெறுநரினால் செய்து கொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கை எனப் பொருளாகும்."; அத்துடன்

(ஆ) "தரப்படுத்தப்பட்ட மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

" "தரப்படுத்தப்பட்ட இறுப்பனவு" என்பது, 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் 18ஆம் பிரிவின் கீழ் மரபுசாரா புதுப்பிக்கத் தக்க வலு மூலவள வரைபடங்கள் கிடைக்காமை காரணமாக அதற்கான திறந்த விலைமனு கோரும் முறைவழி எதுவும் இயலாததாக வுள்ள மரபுசாரா புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களினூடாகக் கொள்ளளவில் 10 மெகா வாற்று அல்லது அதற்குக் குறைவான மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்கின்ற ஒரு மின்வலுப் பொறித் தொகுதியிலிருந்து மின்சாரவலுவைக் கொள்வனவு செய்வதற்குக் கடத்துகை உரிமம் பெறுநரினால் செலுத்தப் படற்பாலதும், அமைச்சரவையினால் அங்கீ கரிக்கப்பட்டதும், கடத்துகை உரிமம் பெறுநரின தும் பாவனையாளர்களினதும் நிதிசார் ஒப்பேறக்கூடிய தன்மையையும் கட்டுபடித் தன்மையையும் கவனத்திற் கொள்கையில் மரபுசாரா புதுப்பிக்கத்தக்க மின்வலுக் கொள்வனவு விலை தீர்மானக் குழுவினால் விதந்துரைக்கப்பட்டதுமான விலை எனப் பொருள்படும்.".

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.